பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 14 செவ்வாய்க்கிழமை 28.06.2022 கதிர் 126

## யாழில் சிறுமி கடத்தல்; 2 இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணத்தில் சிறுமி ஒருவர் கடத்தப்பட்டார் என்று உறவினர்களால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் யாழ். நகரை அண்மித்த பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களை கைது செய்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் ☞2



## ஆஸி. செல்ல முற்பட்ட மேலும் 47 பேர் கைது

ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாக செல்ல முற்பட்ட மேலும் 47 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்புக்கு மேற்கு கடற்பரப்பில் வைத்தே 34 ஆண்கள், 6 பெண்கள் மற்றும் 7 சிறார்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும், இவர்களில் ஆட்கடத்தல்காரர்கள் ஐவரும் உள்ளடங்குகின்றனர் எனவும் கடற்படையின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. ☞2

## வடமராட்சி வடக்கு கிராம அலுவலர்கள் எரிபொருள் வழங்கக் கோரி போராட்டம்

### பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு முன்பாக



யாழ்., வடமராட்சி வடக்கு - பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்கள் தமக்கு எரிபொருள் வழங்குமாறு கோரி இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று சுகயீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட குறித்த கிராம அலுவலர்கள், இன்று வடமராட்சி வடக்கு - பருத்தித்துறை ☞2

## எகிறியது பஸ் கட்டணம் ஆகக் குறைந்தது ரூ.40

எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சருக்கும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சின்போதே குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆகக் குறைந்த பஸ் கட்டணம் 40 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

குறித்த 30 சதவீத கட்டண உயர்வு ஜூன் 30ஆம் திகதி (நாளைமறுதினம்) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாடு முடக்கம்; அரசே விலகு!




### அநுரகுமார வலியுறுத்து

**நாடு இன்று முடங்கியுள்ளது. அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்கப்படுகின்றதாம். தம்மால் முடியாது என்பதை ஆட்சியாளர்கள் நிரூபித்துவிட்டனர். எனவே, கோட்டா - ரணில் அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டும்.**

**- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. வலியுறுத்தினார்.** ☞2

## 'மே - 9' வன்முறை தொடர்பில் கமல் குணரத்ன வாக்குமூலம்



மைனா கோ கம, கோட்டா கோ கம உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது பாதுகாப்புத் தரப்பினர் உரிய நடவடிக்கை எடுத்தார்களா என்பதை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ☞2

## காட்டுச் சட்டங்களால் நாட்டை ஆள முடியாது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு



ஒரு நாட்டை காட்டுச் சட்டங்களால் ஆள முடியாது. அதற்காக ஜனநாயக ரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஜனநாயக ரீதியான வெற்றிக்காக நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியேயுள்ள பரப்புகளிலும் ☞2

## ஆறு மாதங்களுக்குள் என்னால் முடியாவிட்டால் வீடு செல்வேன்

### அமைச்சர் தம்மிக்க சத்தியம்



ஆறு மாதங்களே என் இலக்கு. அந்தக் காலப்பகுதிக்குள் முன்னேற்றகரமாக எதையாவது செய்ய முடியாவிட்டால் பதவி துறந்து வீடு செல்வேன்.

- இவ்வாறு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான '360' அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ☞2

## யாழில் சிறுமி துஷ்பிரயோகம்; குடும்பஸ்தர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணத்தில் 6 வயது சிறுமியைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட குடும்பஸ்தரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரான்பற்று பகுதியில் இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

சம்பவத்தையடுத்து சிறுமிக்கு ஏற்பட்ட மன உளைச்சலால் அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

சிறுமி வழங்கிய தகவலின் அடிப்படையில் அவரது தந்தையின் நண்பரான அயல் வீட்டைச் சேர்ந்த 45 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். ☞2

## மக்களுக்குத் தலைவணங்கி கோட்டா உடன் பதவி விலகு!



நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம்

நுவரெலியாவில் எரிபொருள், சமையல் எரிவாயு, குழந்தைகளுக்கான பால் மா மற்றும் உணவுப் பொருள்கள் விலை உயர்வைக் கண்டித்தும், ஜனாதிபதி ☞2

## தலையை வெட்டி கங்கையில் வீசிய இளைஞர் கைது!

அக்குரஸ்ஸ, திப்போடுவ பிரதேசத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான மாந்திரீகரைக் கொலை செய்து விட்டு, அவருடைய தலையை வெட்டி நில்வலா கங்கையில் வீசிய சம்பவத்தில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

24 வயது இளைஞரான ☞2

## யாழில் சிறுமி கடத்தல்; .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவருவதாவது,

யாழ். நகரை அண்மித்த பகுதியைச் சேர்ந்த சிறுமி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நகர் பகுதியில் வைத்து கடத்தப்பட்டார் என்று உறவினர்களால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், நேற்று குறித்த சிறுமி கிளிநொச்சிப் பகுதியில் வைத்து கிளிநொச்சிப் பொலிஸாரால் மீட்கப்பட்டு கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, தமது முறைப்பாடு தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் உரிய விசாரணைகளை முன்னெடுக்கவில்லை எனவும், தமது பகுதிக்கு அண்மையில் வசிக்கும் இளைஞர் குழுவால் தமக்குத் தொடர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன எனவும், அது தொடர்பிலும் பொலிஸாருக்கு அறிவித்தும் எந்த நடவடிக்கையும் பொலிஸார் எடுக்கவில்லை எனவும் சிறுமியின் உறவினர்கள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் முறையிட்டிருந்தனர்.

அதையடுத்துதுரிதவிசாரணைகளை முன்னெடுத்துள்ள யாழ். பொலிஸார் சிறுமியின் உறவினர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்களைக் கைது செய்து யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஆறு மாதங்களுக்குள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் பட்டினியால் வாடினால், நாம் மட்டும் உண்பதில் அர்த்தம் இல்லை. ஆக, சென்று எதையாவது செய் எனக் கூறியே அம்மா என்னை நாடாளுமன்றம் அனுப்பிவைத்தார்.

6 மாதங்களுக்குள் உங்களாலும் முடியாவிட்டால் - பதவி துறந்து வாருங்கள் என மனைவியும் அறிவுரை வழங்கியுள்ளார். அதேபோல 'தாத்தா கம் ஹோம்' ('அப்பா வீட்டுக்கு வாங்க') எனப் பதாகை ஏந்தப்படும் எனப் பிள்ளைகளும் அறிவித்துவிட்டனர்.

அந்தவகையில் எனக்கான காலம் 6 மாதங்கள். எனக்கு வேலை செய்வதற்கான காலம் இது. அந்தக் காலப்பகுதிக்குள் முன்னேற்றகரமாக எதையாவது செய்யாவிட்டால், 'தாத்தா கம் ஹோம்' எனக் கூறி பிள்ளைகள் வந்துவிடுவார்கள். அப்போது எனக்கு வீடு செல்ல வேண்டிவரும்.

என்னைப் போல் ஒருவருக்கு 6 மாதங்களுக்குள் மக்களுக்கு முன்னேற்றகரமான (பொசிடிவாக) - எதையாவது செய்ய முடியாவிட்டால், பதவி வகித்து என்ன பயன்? - என்றார்.

அத்துடன், தனது பணி இலக்குகளையும் தம்மிக்க பெரேரா பட்டியலிட்டு ஆவணமொன்றை வெளியிட்டுள்ளார். டொலர்களை உள்ளீர்ப்பதற்கான வழி முறைகளையும் பட்டியலிட்டார்.

வங்குரோத்தடைந்த கம்பனிகளைப் பொறுப்பேற்று, அதனைக் கட்டியெழுப்பும் நிர்வாகத் திறன் உள்ள தனக்கு, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி சவாலையும் வெற்றிகொள்ள முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## காட்டுச் சட்டங்களால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் ஊடாக மக்களுக்கான வெற்றிகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல தரப்பு பிரதிநிதிகள் மற்றும் கட்சித் தலைவர்களுடன் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடத்திய கலந்துரையாடலின்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

குறிப்பாக 21 ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு, அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் ஊடாக ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதே தமது ஒரே நோக்கமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல தரப்பினரும் எதிர்க்கட்சித் தலைவரிடம் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தனர்.

குறித்த சகல முன்மொழிவுகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது உறுதியளித்தார்.

## யாழில் சிறுமி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபர் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அதையடுத்து சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

## வடமராட்சி வடக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச செயலகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கிராம அலுவலர் அத்தியாவசிய அலுவலரா? அநாவசிய அலுவலரா?, கொவிட் காலத்தில் அத்தியாவசிய அலுவலர்; பொருளாதார நெருக்கடி காலத்தில்...?, எரிபொருள் விநியோகத்தில் கிராம அலுவலர்களைப் புறக்கணிக்காதீர்கள் - என்று எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

## ஆஸி. செல்ல முற்பட்ட ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வென்னப்புவ மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியா செல்ல முற்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் ஆரம்பக்கட்ட விசாரணையின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்தில் இதுவரை சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட 500 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## 'மே - 9' வன்முறை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ஆணைக்குழுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன ஆஜராகியுள்ளார்.

மேற்படி வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என ஆணைக்குழுவினர் இன்று தெரிவித்துள்ளனர்.

மேலும், ஆளும் கட்சி உறுப்பினர்களான சன்ன ஜயசுமன மற்றும் ரமேஷ் பத்திரண ஆகியோரிடமும் ஆணைக்குழு நேற்று வாக்குமூலம் பெற்றுள்ளது.

முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவும் ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார்.

தற்போது வரை சுமார் 30 அதிகாரிகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட தலைமையிலான இந்த ஆணைக்குழு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அண்மையில் நியமிக்கப்பட்டது.

## நாடு முடக்கம்; .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அநுரகுமார எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் நெருக்கடியால் மாணவர்களுக்குப் பாடசாலை செல்ல முடியவில்லை. மக்களுக்கு ஒரு நகரில் இருந்து இன்னுமொரு நகருக்குச் செல்ல முடியவில்லை. மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்ல முடியாதுள்ளது.

நோயாளிகளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வாகனம் இல்லை. இதனால் நாடு மேலும் வீழ்ச்சியடையும். எனவே, இந்த அரசு வீடு செல்ல வேண்டும் - என்றார்.

## தலையை வெட்டி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த சந்தேகநபர் பலகாவல பகுதியிலுள்ள வீடொன்றில் பதுங்கியிருக்கின்றார் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த இளைஞர் நிலவலா கங்கையில் வீசிச் சென்ற மாந்திரீகின் தலை மற்றும் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட வாள் ஆகியவற்றைக் கண்டுபிடிக்கப் பொலிஸார் தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

## மக்களுக்குத் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகப் பதவி விலக வேண்டும் எனக் கோரியும், அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா, உடப்புசல்லாவ வீதியில் ஆவேலியா சந்தியில் இன்று இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆவேலியா கிராம பொதுமக்களும், இளைஞர் - யுவதிகளும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள், எரிபொருள், எரிவாயுவைப் பெற்றுக்கொடு, அடக்குமுறையை உடன் நிறுத்து!, மக்களுக்குத் தலைவணங்கி கோட்டா உடன் பதவி விலகு!, மருந்தும் இல்லை; பால்மாவும் இல்லை; பணமும் இல்லை போன்ற கோஷங்களை எழுப்பினர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622






நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# விவரம் புரியாதோரின் விசாரணை

நாட்டின் பொருளாதார நெருக்கடியும் அதனால் ஏற்பட்டுள்ள பேரவலங்களும் ஒருபுறம் என்றால், மறுபுறம் அரசின் திருகுதாளப்போக்கு – எதேச்சதிகாரம் – தரும் தொல்லைகள் அதைவிட அதிகம்.

நாடு நெருக்கடியில் – இக்கட்டில் – சிக்கியிருக்கின்றது. இதிலிருந்து மீள்வதற்கான முக்கிய விவகாரம், மக்கள் விழிப்புணர்வு பெறுவதாகும். மக்கள் விழிப்பாக – உண்மைகளை அறிந்து, கவனத்திலெடுத்து, முன்னெச்சரிக்கையாக – நடக்காதமைதான் இந்தப் பிரச்சினைகளுக்கு ஊற்றுக்கண் என்பது எல்லோரும் இப்போது ஏற்றுக்கொள்ளும் பொதுவான கருத்தியலாகும்.

மக்களுக்கு உண்மையை உணர்த்தி, விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஊடகங்களின் பங்கும் அளப்பரியது. மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டு, இந்த நிலைமையை நேரத்துடன் மக்கள் தட்டிக் கேட்டிருந்தால், இந்த அவலம் இவ்வளவு மோசமான வடிவம் எடுத்திருக்காது என்பது பலரின் கணிப்பு. அந்த வகையில் பார்த்தால், இந் நிலைமைக்கு ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் கூட பொறுப்பாளிகள்தாம்.

காலம் தாழ்த்தியாவது – இந்த நெருக்கடி மட்டத்திலாவது – மக்களுக்கு உண்மையை உரைக்காது விடின் ஊடகங்கள் நிச்சயம் தவறிழைத்து விடுவனவாகிவிடும்.

ஆனால், இந்த இக்கட்டு நிலைமைக்கு வந்த பின்னரும் கூட, ஊடகங்கள் உண்மையை எடுத்தியம்ப விடாமல் எதேச்சதிகாரத்தின் அரூப கரங்கள் தம் கைவரிசையை காட்டுகின்றன என்பதை சுதந்திர ஊடக இயக்கம் விசனத்துடன் சுட்டிக்காட்டுகின்றன.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை என்ற பெயரில் ஊடகவியலாளர்களை அழைத்துப் பெரும் தொல்லை கொடுக்கின்றனர். இது ஊடகவியலாளர்களின் தற்றுணிவான பணிக்குப் பெரும் இடைஞ்சலாக இருக்கின்றது என அந்த இயக்கம் சுட்டிக்காட்டுகின்றது. பொதுவாக பாதுகாப்புத் தரப்பிலிருந்து முறைப்பாடு கிடைத்ததும் உடனடியாகவே சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்கள் விசாரணைக்கு என்று அழைக்கப்பட்டு தொல்லைப்படுத்தப்படுகின்றனர் என அது பற்றிய விவரங்களுடன் சுட்டிக் காட்டுகின்றது அந்த அமைப்பு.

ஊடகத்துறையின் அடிப்படை விடயங்கள் கற்கத் தெரியாதவர்கள், விடயங்களை சீர்தூக்கிப் பார்த்து, ஏதேனும் குற்றம் இழைக்கப்பட்டிருக்கின்றதா என்பதை ஆராயும் நிலைந்தான் காணப்படுகின்றது. ஊடகவியல் அறிவு இல்லாதவர்கள் எல்லாம் குற்றப் புலனாய்வுப் பிரிவில் இருந்து கொண்டு, இவ்விடயங்களில் தீர்மானங்களை எடுத்து, ஊடகவியலாளர்களைத் தொல்லைப்படுத்துவது மட்டுமன்றி, ஊடகத் துறையையும் கீழ்மைக்கு உட்படுத்துகின்றனர் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

கவிஞர் ஜாஸ்மினைத் தேவையற்று கைதுசெய்து, தடுப்புக் காவலில் வைத்து, சர்வதேசரீதியில் கூட இலங்கைக்குக் கெட்ட பெயர் சம்பாதித்தமை கூட இப்படி விவரம் புரியாதவர்கள் இத்தகைய அம்சங்களைக் கையாலப் புறப்பட்டமையால்தான் நேர்ந்தது.

அதுதான் இப்போது குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குள் கட்டுமட்டின்றி நடப்பதாக சுயாதீன ஊடக இயக்கம் சுட்டிக்காட்டுகிறது.

மலையைக் கெல்லி எலியைப் பிடித்த மாதிரி, தேவையில்லாமல் பல ஊடகவியலாளர்களையும் தொல்லை பண்ணி, கடைசியில் அவர்களில் சிலருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை எடுத்தாலும் கடைசியில் நீதிமன்றங்களினால் அவை நிராகரிக்கப்படுகின்றன. ஊடகத்துறை பற்றிய அடிப்படை அறிவு கூட இல்லாதவர்களை வைத்து ஊடகத்துறை தொடர்பான விடயங்களை குற்றப்புலனாய்வுத் துறை கையாண்டால், பெறுபேறுகள் இப்படித்தான் இருக்கும்.

எதேச்சதிகாரத்தால்தான் நாட்டில் இந்த நிலைமை என்றால், அந்த எதேச்சதிகாரத்தின் கருவியாக இருக்கும் குற்றப்புலனாய்வுத்துறை இந்தச் சீத்துவத்தில்தான் இயங்குகிறது.

# அரசுக்கு எதிராக மக்கள் மீண்டும் வீதிக்கிறங்குவர்!

## நாலக கொடஹேவா எச்சரிக்கை



நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் இது வரை முன்னெடுக்கவில்லை.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாவிடின் மக்கள் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மீண்டும் வீதிக்கிறங்குவார்கள் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் தொழிற்துறை தரப்பினருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாடு எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கம் அரசாங்கத்திடம் கிடையாது.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சர்வ கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்குமாறு பல தரப்பினர் முன்வைத்த யோசனைகளைத் தவறாக விளங்கிக்கொண்டமை அரசாங்கத்தின் தோல்விக்குப் பிரதான காரணியாக அமைந்துள்ளது.

நாட்டின் பிரச்சினை தொடர்பில் பிரதமர், அமைச்சர்கள் உட்பட அரசாங்கத்தின் முக்கிய தரப்பினர் எவரும் கருத்துரைப்பதில்லை.

ஜனாதிபதியும் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதில்லை. பிரச்சினைக்குத் தீர்வு காண அவதானம் செலுத்தாமல் இருந்தால் நாட்டு மக்கள் மீண்டும் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வீதிக்கிறங்குவார்கள்.

நாடாளுமன்றில் ஸ்திரமான பலமில்லாத பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நாட்டு நலனைக் கருத்திற்கொண்டு முன்னெடுக்கும் தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம் என்பதைக் குறிப்பிட்டுள்ளோம்.

ஸ்ரீ லங்கன் விமான சேவை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் உள்ளிட்ட நட்டமடையும் அரச நிறுவனங்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என அரசாங்கம் குறிப்பிட்டாலும் அது தொடர்பாக அவதானம் செலுத்தப்படவில்லை.

எரிபொருள், எரிவாயு விநியோகத்தில் காணப்படும் சிக்கல் நிலைமை, மின்சார தட்டுப்பாடு மற்றும் மின்சார விநியோகத் தடை, அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தால் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பாக அரசாங்கம் இதுவரை அவதானம் செலுத்தவில்லை. - என்றார்.

# வடமராட்சி கிராமசேவகர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்!




வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட கிராமசேவகர்கள் தமக்கு எரிபொருள் வழங்குமாறு கோரி இன்று (செவ்வாய்க்கிழமை) காலை கவன வீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றைய தினம் சுகவீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்ட கிராமசேவகர்கள் இன்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி கிராம சேவகர்களால் நடத்தப்படும் கவனவீர்ப்பு போராட்டத்தில் கிராம சேவகர்கள் அத்தியாவசிய அலுவலர்களா? அல்லது அநாவசிய அலுவலர்களா? எரிபொருள் விநியோகத்தில் கிராம அலுவலர்களைப் புறக்கணிக்காதீர்கள், கொவிட் காலத்தில் அத்தியாவசிய அலுவலர்கள் பொருளாதார நெருக்கடி காலத்தில்...? என பதாதைகள் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# போதியளவு மருந்துகள் கையிருப்பில் இல்லை!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து பிரச்சினைகள் காரணமாக மக்கள் இந்த நேரத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று(திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் பிரசன்ன கொலம்பகே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், மக்கள் இந்த நேரத்தில் இயலுமான வரை பாதுகாப்பாக இருப்பது முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாட்டில் போதியளவு மருந்து கையிருப்பு இல்லை என்று தெரிவித்த அவர், இருக்கும் மருந்துகளின் கையிருப்பு வேகமாகக் குறைந்து வருகிறது எனவும் கூறியுள்ளார்.

அலுவலகக் கடமைகள், வீட்டு வேலைகள் போன்றவற்றின் போது விபத்து ஏற்பட்டால், நோயாளிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதும், அதுபோல வைத்தியர்கள், வைத்திய சாலை ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் பிரச்சினைகள் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் மருந்துகள் தொடர்பாகக் கவனித்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த அவர், இந்த நேரத்தில் குழந்தைகளை நன்றாகக் கவனித்துக்கொள்வது மிகவும் அவசியம் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# ஆள் அரவமின்றி நின்ற ட்ரக்கில் இருந்து 42 சடலங்கள் மீட்பு



அமெரிக்கா டெக்சாஸ் மாகாணத்தில் ரயில் தண்டவாளம் அருகே நின்ற டிரெய்லர் டிரக்கில் இருந்து 42 சடலங்களை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

சான் ஆண்டானியோ நகரில் நின்ற மர்ம டிரக் குறித்து கிடைத்த தகவலில் பொலிஸார் சோதனையில் ஈடுபட்டனர். உயிரிழந்தவர்கள் அனைவரும் அகதிகள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

16 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என கூறப்படுகிறது.

வெயிலின் தாக்கத்தால் அகதிகள் உயிரிழந்து இருக்கலாம் என கூறப்படும் நிலையில், பொலிஸார் விசரித்து வருகின்றனர்.




## உலக அளவில் குரங்கம்மை பாதிப்பு 3,400இற்கும் மேற்பட்டோருக்கு

உலக அளவில் கடந்த புதன்கிழமை நிலைவரப்படி 3 ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்டோருக்கு குரங்கம்மை பாதிப்பு உறுதிசெய்யப்பட்டிருப்பதாகவும், ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாதிப்புக்குள்ளானவர்களில் பெரும்பாலானவர்கள் ஐரோப்பிய நாடுகளை சேர்ந்தவர்கள் எனவும் கூறியுள்ளது.

## உக்ரைனில் வணிக வளாகம் மீது ரஷ்ய படைகள் தாக்குதல்;16 பேர் சாவு

உக்ரைனில் வணிக வளாகம் மீது ரஷ்ய படைகள் நடத்திய ஏவுகணை தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 16ஆக அதிகரித்துள்ளது.

கிரெமென்சுக் நகரில், மக்கள் அதிகம் கூடியிருந்த வணிக வளாகத்தில் ரஷ்ய படைகள் திடீரென தாக்குதல் நடத்தின.

ஏவுகணைத் தாக்குதலால் வணிக வளாகம் தீயில் எரிந்த நிலையில், படுகாயமடைந்த 59 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறன்றனர்.




## எரிபொருள் விலையால் வாகன சாரதிகள் போராட்டம்
### பேரு நாட்டில்

பேருவில், எரிபொருள் விலை உயர்வால் ஏற்பட்டுள்ள தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக்கோரி சரக்கு வாகன சாரதிகள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்ததையடுத்து, அங்கு போராட்டங்கள் நடை பெற்று வருகின்றன.

அதனை கட்டுப்படுத்த பேருவில் அவசர நிலை அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், துறைமுக நகரான காலோவில் சரக்கு வாகன சாரதிகள் டிரக்குகளில் ஒலி எழுப்பியபடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## அமெரிக்காவில் கருக்கலைப்புக்கு எதிரான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்துப் போராட்டம்

கருக்கலைப்புக்கு எதிராக அமெரிக்க உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதையடுத்து, பல்வேறு போராட்டங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆர்ஜென்டினா தலைநகர் பியூனஸ் அயர்ஸில் உள்ள அமெரிக்க தூதரகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள், கருக்கலைப்புக்கு ஆதரவான பதாகைகளை ஏந்தி, கோஷங்கள் எழுப்பினர். இதேபோல், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



# ஜோர்டனில் இரசாயன தாங்கி வெடித்தது நச்சு வாயுக் கசிவால் 12 பேர் உயிரிழப்பு



ஜோர்டனின் அகபா துறைமுகத்தில் உள்ள ஒரு கப்பில் கிரேன் மூலம் குளோரின் தாங்கிகள் ஏற்றப்பட்டன. அப்போது, திடீரென கிரேன் செயலிழந்ததை அடுத்த, ஒரு குளோரின் தாங்கி மேலிருந்து விழுந்து வெடித்தது. இதில், பெரியளவில் மஞ்சள் நச்சு புகை வெளியேறியது.

இதனால், இந்த விபத்தில் அங்கு இருந்த கப்பல்துறை பணியாளர்கள் 12 பேர் உயிரிழந்தனர். 250க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்நிலையில், இந்த சம்பவத்தின் வீடியோ இணையத்தளங்களில் வைரலாகி வருகிறது. இதுகுறித்து அரசு சார்பில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

அகபா துறைமுகத்தில் மதியம் 3.15 மணிக்கு குளோரின் தாங்கி விழுந்து வெடித்தது. இதனால் வாயுக் கசிவு ஏற்பட்டது. காயமடைந்தவர்களில் 199 பேர் இரசாயான பாதிப்புக்குள்ளாகி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 12 பேர் உயிரிழந்த நிலையில், பலி எண்ணிக்கை உயரலாம் எனவும் கூறப்படுகிறது.

இதன் எதிரொலியால், துறைமுகத்திற்கு வடக்கே 16 கி.மீ. தொலைவில் உள்ள அகபா நகரவாசிகள் ஜன்னல் மற்றும் கதவுகளை மூடி உள்ளேயே இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கையாக, அகபாவின் தெற்கு கடற்கறையில் இருந்து பொதுமக்கள் வெளியேறினர். சம்பவ இடத்திற்கு பாதுகாப்பு துறை சிறப்பு குழுக்கள் துறைமுகத்திற்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஈழத்தமிழர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணம் நிபந்தனையோடுதான் இலங்கைக்கு உதவவேண்டும்

## கவிஞர் முத்துலிங்கம் வலியுறுத்து



கவிஞர் ப.ஜீவானந்தம் எழுதிய 'ஈரநிலம்' என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழா அண்மையில் கோவையில் நடைபெற்றது. விழாவுக்கு துடியலூர் தமிழ்ச் சங்கத் தலைவர் கலையரசன் தலைமை வகித்தார். புத்தகத்தை வெளியிட்டு திரைப்படப்பாடலாசிரியரும், முன்னாள் அரசவைக் கவிஞரும் முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினரும் அ.தி.மு.க. நட்சத்திரப் பேச்சாளருமான கவிஞர் முத்துலிங்கம் சிறப்புரையாற்றினார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழைக் கொண்டு வர வேண்டும் என்று முதலமைச்சர் ஸ்டாலின் சொன்னபோது அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவோம், என்று உச்சநீதிமன்ற நீதிபதி ரமணா கூறியிருக்கிறார். ஆகவே சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகவும் தமிழைக் கொண்டு வர வேண்டும்.

ஆக இந்திய ஆட்சி மொழியாகவும் உயர்நீதி மன்ற வழக்காடு மொழியாகவும் தமிழைக் கொண்டு வருவதோடு திருக்குறளையும் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் தமிழ்நாட்டில் தாமரை மலர முடியுமே தவிர அண்ணாமலை போன்றவர்களின் ஆர்ப்பாட்டத்தாலோ, அ.தி.மு.கவில் இருந்து சிலரை வளைத்துப்போடுவதாலோ தமிழ் நாட்டில் தாமரை காலூன்ற முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்த சிங்கள அரசாங்கம் இப்போது இந்தியாவிடம் பண உதவி, எரிபொருள் உதவி, உணவுப்பொருள் உதவியை எதிர்பார்க்கிறது. இந்தியாவும் உதவி வருகிறது. என்னதான் உதவிசெய்தாலும்சீனாவையும்பாகிஸ்தானையும்தான் அது நட்பு நாடாகக் கருதுகிறதே தவிர இந்தியாவைப் பகை நாடாகவே உள்ளுக்குள் நினைக்கிறது.

அதனால், இந்தியா இலங்கைக்கு உதவி செய்ய நினைத்தால், அங்குள்ள ஈழத்தமிழர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணத்தைக் கொடுத்து ஆட்சி அதிகாரத்தை அவர்களே அமைத்துக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு சகல உரிமைகளையும் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்க வேண்டும். அதற்கு சம்மதித்தால் உதவலாம். இல்லையென்றால் இலங்கை அரசுக்கு உதவுவது என்பது பாம்புக்குப் பால் வார்த்த கதை ஆகிவிடும்.

தமிழர்களைக் கொன்ற பாவம்தான் சாபமாக வந்து சிங்களர்களே, சிங்கள அரசை எதிர்க்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. ஈழத்தமிழர்களின் போராட்டத்தில் சிங்கள அரசுக்கு உதவியாக இருந்த இந்தியாவும் இதை உணர்ந்து திருந்த வேண்டும், என்று கவிஞர் முத்துலிங்கம் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

## அ.தி.மு.க. பொதுக்குழு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் பன்னீர் செல்வம் தரப்பு கேவியட் மனுத் தாக்கல்



ஒற்றைத் தலைமை விவகாரத்தால் அ.தி.மு.கவில் ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடிபழனிசாமிதரப்பினடையே மோதல் உச்சகட்டத்தை எட்டியுள்ள நிலையில், அ.தி.மு.க. பொதுக்குழு விவகாரம் தொடர்பாக ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் கேவியட் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொதுக்குழு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக யாராவது மேல்முறையீடு செய்தால் தங்கள் தரப்பை கேட்காமல் உத்தரவு எதுவும் பிறப்பிக்கக்கூடாது என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், தலைமை தேர்தல் ஆணையத்தில் ஓ.பன்னீர்செல்வம் அளித்துள்ள அறிக்கையில், அ.தி.மு.கவின் ஒருங்கிணைப்பாளராக 5 ஆண்டுகள் பதவிக் காலம் உள்ளதாகவும், இன்றுவரை கட்சியின் ஒருங்கிணைப்பாளர் தாம் தான் என்றும், அதில் மாற்றம் இல்லை என்றும், கூறியுள்ளார். தலைமைக் கழக நிர்வாகிகள் கூட்டத்தை கூட்டுவதற்கு தலைமை நிலைய செயலாளருக்கு அதிகாரம் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்ட விதிகளின் கடந்த பொதுக்குழு நடந்ததா, இல்லையா? என்பது குறித்தும் கடந்த பொதுக்குழுக் கூட்டத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள் குறித்தும் தலைமை தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஓ.பன்னீர்செல்வம் தரப்பு வழக்கறிஞர் திருமாறன் குறிப்பிட்டுள்ளார்.



## மும்பையில் அடுக்கு மாடி குடியிருப்பு இடிந்தது 7 பேர் உயிருடன் மீட்பு

மகாராஷ்டிரா தலைநகர் மும்பை குர்லா பகுதியில் உள்ள நாயக் நகரில் நான்கு அடுக்கு மாடிக் குடியிருப்புக் கட்டடம் ஒன்று நேற்றிரவு இடிந்து விழுந்தது. தகவல் அறிந்த தீயணைப்பு மற்றும் மீட்பு படை பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

முதல் கட்டமாக இடிபாடுகளில் இருந்து 7 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் 20 முதல் 25 பேர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இதையடுத்து மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

விபத்துக் குறித்து அறிந்த மகாராஷ்டிரா அமைச்சர் ஆதித்யா தாக்கரே சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டுள்ளார்.

# மத உணர்வைத் தூண்டினார் என பத்திரிகையாளர் கைது

## ராகுல் காந்தி டுவிட்டரில் கண்டனம்



டெல்லியில் இருந்து செயல்படும் ஆல்ட் நியூஸ் என்ற செய்தி நிறுவனத்தின் இணை நிறுவனரும், பத்திரிகையாளருமான முகமது ஜுபைர், மதம் சார்ந்த விடயங்கள் பற்றி தொடர்ச்சியாக டுவிட்டர் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பதிவிட்டு வந்தார் என கூறப்படுகிறது.

சிலரது மத நம்பிக்கைகளை அவர் புண்படுத்தினார் என குற்றச்சாட்டு எழுந்ததன் அதன் அடிப்படையில், டெல்லி சிறப்பு பிரிவு பொலிஸார் ஜுபைரை கைது செய்தனர். அவர்மீது மத உணர்வுகளை தூண்டிசமூகஅமைதியைசீர்குலைப்பது உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து நேற்றிரவு கைது செய்யப்பட்ட ஜுபைர், பட் டியாலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை ஒரு நாள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தநிலையில், முகமது ஜுபைர் கைது குறித்து கருத்து தெரிவித்துள்ள ராகுல்காந்தி, பா.ஜ.கவின் வெறுப்பு மற்றும் மதவெறியை அம்பலப்படுத்தும் ஒவ்வொரு நபருக்கும் அக்கட்சியால் அச்சுறுத்தல் இருப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஓர் உண்மையின் குரலைக் கைது செய்தால் இன்னும் ஆயிரம் குரல் எழும்பும் என்றும் தமது டுவிட்டர் பதிவில் ராகுல் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பத்திரிகையாளருக்கு காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம்ரமேஷும்ஆதரவுதெரிவித்துள்ளார். முகமது ஜுபைர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று காங்கிரஸ் எம்.பி.மாணிக்கம் தாகூரும் வலியுறுத்தியுள்ளார்.



## அக்னிபாத் திட்டத்தின் கீழ் விமானப்படைக்கு 94 ஆயிரம் பணி விண்ணப்பங்கள் கிடைத்தன

முப்படைகளுக்கு ஆள்களைத் 'தேர்வு செய்ய அக்னிபாத்' திட்டத்தை இந்திய மத்திய அரசு அறிவித்தது. வடமாநிலங்களில் போராட்டம் வெடித்தபோதிலும், திட்டம் வாபஸ் பெறப்படாது என்று அரசு உறுதியாக அறிவித்துள்ளது.

ராணுவம், விமானப்படை, கடற்படை என ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக ஆள்தேர்வு நடைபெறுகிறது. விமானப்படைக்கான ஆள்தேர்வுப் பணி கடந்த 24 ஆம் திகதி தொடங்கியது.

ஒன்லைனில் விண்ணப்பிப்பதற்கான இணையத்தளம், அன்று காலை 10 மணி முதல் செயல்பட தொடங்கியது. நேற்று காலை 10.30 வரையான நிலைவரப்படி, 94 ஆயிரத்து 281 பேர் விண்ணப்பித்துள்ளனர் என இந்திய ராணுவ அமைச்சக செய்தித் தொடர்பாளர் பாரத் பூண் பாபு தெரிவித்துள்ளார்.

# மட்டு. உதவுங்கரங்கள் அமைப்பினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைப்பு





(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவரும் சமூக தொண்டு நிறுவனங்களில் ஒன்றான வழி தேடும் சிறுவர்களின் ஒளியாக மிளிரும் கிழக்கு சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் உதவுங்கரங்கள் அமைப்பினால் பொருளாதார நெருக்கடியான இச்சூழலில் வாழ்ந்துவரும் தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

உதவுங்கரங்கள் அமைப்பின் தலைவர் விரிவுரையாளர் எஸ்.ஜெயராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.அருள்மொழி கலந்து கொண்டார். ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் பொன்.விமலேஸ்வரன், மயிலம்பாவெளி கிராம உத்தியோகத்தர் ஆ.பாலகிருஷ்ணன்,உதவுங்கரங்கள் அமைப்பின் பணிப்பாளர்கள் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டு நிவாரணப் பொதிகளை வழங்கினர்.

இதன்போது மயிலம்பாவெளி, தன்னாமுனை, சவுக்கடி, ஆறுமுகத்தான்குடியிருப்பு மற்றும் விநாயகபுரம் போன்ற கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 80 குடும்பங்களுக்கு ஐந்தாயிரத்திற்கு மேற்பட்ட பெறுமதிமிக்க நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. இதற்காக நான்கு லட்சம் ரூபாயை எஸ். லோகேந்திரா வழங்கியிருந்தார்.

# கல்முனை வலயத்தில் 7ஆசிரியைகளின் இடமாற்றத்துக்கு இடைக்காலத் தடை!

## கல்முனை மேல் நீதிமன்றம் வழங்கியது

(நூருள் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் கல்முனை கல்வி வலயத்தில் கடமை புரியும் 07 ஆசிரியைகளுக்கு வேறு வலயங்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்துக்கு கல்முனை மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேற்படி ஆசிரியர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட உறுதிகேள் எழுத்தாணை மனு கடந்த 24 ஆம் திகதி கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ட்றொக்சி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி. நகுலேஸ்வரி பிள்ளைநாயகம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜெ.அருளானந்தம் மற்றும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

மனுதாரர்கள் தரப்பு வாதங்களைக் கேட்டறிந்த நீதிபதி குறித்த வழக்கை மீண்டும் நேற்றுத் திங்கட்கிழமை அழைக்க உத்தரவிட்டிருந்தார்.

நேற்று வழக்கு மன்றின் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபோது மனுதாரர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள், கிழக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் கீழ் அங்கீகரிக்கப்படாத ஓர் இடமாற்றத்தை மனுதாரர்களுக்கு வழங்கியமை நியாயமற்றதும் சட்டமுரணானதுமாகும் என நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

அதையடுத்து மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்துக்கு இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பித்த நீதிபதி, எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி மன்றில் முன்னிலையாக பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்புமாறு கட்டளை பிறப்பித்துள்ளார்.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி எம்.எம். நூர்ஜஹானின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன், சட்டத்தரணிகள் காலித் முஹைமீன் மற்றும் முபாறக் முஅஸ்ஸம் ஆகியோர் ஆஜராகினர்.

# மூக்குக் கண்ணாடி, சக்கர நாற்காலிகள் பின்தங்கிய மாணவர்களுக்கு வழங்கல்

(நூருள் ஹுதா உமர்)



பிரன்லி சிப் அமைப்பும் நியூ சன் ஸ்டார் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த - பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளைய அமைப்பினால் பதுளையிலுள்ள பிந்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் மற்றும் சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு பதுளை பொது நூலக கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்றது. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளும், சக்கரநாற்காலிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இநிகழ்வில் பதுளை வலயக்கல்வி பணிப்பாளர் கார்த்தீபன், பதுளை சுகாதார வைத்திய அதிகாரி சுரேஷ் கண்ணன், ஆசிரிய ஆலோசகர் இந்திராணி யோகேந்திரன், பிரன்லிசிப் அமைப்பின் தலைவர் எஸ். யசோதராஜன், சேவைக்கான இணைப்பாளர் பன்னீர்செல்வம், பிரன்லி சிப் அமைப்பின் செயலாளர் எம். எவ். ஆரிபா, நியூ சன் ஸ்டார் கழகத்தின் தலைவரும் இளம் விஞ்ஞானியுமான சோ. வினோஜ்குமார், பாடசாலை ஆசிரியர்களும் மற்றும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

மக்களுக்கு யோகாக்கலையின் உண்மைகளை உணர்த்த, பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் மற்றுமொரு சேவையே அறிவொளி வளையம் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரு பாலினத் திருமணத்துக்காக

# முஸ்லிம் தோழியைக் கரம் பிடிக்க தேடி வந்த தமிழக யுவதி விடுதலை

(பாறுக் ஷிஹான்)






ஒரு குழந்தையின் தாயாரான இளம் முஸ்லிம் யுவதி ஒருவரைத் திருமணம் செய்யும் நோக்குடன் இலங்கைக்கு வருகை தந்தவர் எனக் கூறப்படும் தென்னிந்தியத் தமிழ் பெண் அது தொடர்பான வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவரைத் திருமணம் செய்ய விரும்பிய அக்கரைப்பற்று யுவதியைப் பெண்கள் காப்பகமொன்றில் அவரது குழந்தையுடன் ஒப்படைக்க உத்தரவிட்ட நீதிமன்றம், வழக்கை எதிர்வரும் ஜூலை மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் - ஒன்றரை வயதுக் குழந்தையின் தாயாரான - 19 வயது முஸ்லிம் நண்பியைத் தேடி தமிழ்நாடு குன்னத்தூரைச் சேர்ந்த பட்டதாரியான 24 வயதுடைய தமிழ்ப் பெண் ஒருவர் கடந்த 20 ஆம் திகதி இந்தியாவிலிருந்து வந்துள்ளார். இருவரும் தோழிகளாகத் தொலைபேசி மூலம் உரையாடி வந்தனர் எனவும் தற்போது யுவதிகள் இருவரும் தமக்குள் திருமணம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்தமையைத் தொடர்ந்து, அக்கரைப்பற்று முஸ்லிம் பெண்ணின் பெற்றோர் அக்கரைப்பற்று பொலிஸில் அதையொட்டி முறைப்பாடு செய்தனர். அதனால் விடயம் நீதிமன்றுக்கு வந்தது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் திருமணம் செய்துள்ள நண்பி ஒருவர் மூலம் மேற்படி இரு பெண்களும் தொலைபேசியூடாக தொடர்பைப் பேணியுள்ளனர் என்றும், முஸ்லிம் யுவதிக்கு திருமணமாகி ஒன்றரை வயது மகளும் கணவரும் இருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது. அந்தப் பெண்ணின் தந்தை ஒரு கூலித் தொழிலாளி. அவரின் தாயார் மத்திய கிழக்கு நாடொன்றில் வீட்டுப் பணிப்பெண்ணாக உள்ளார்.

கடந்த புதன்கிழமை 22ஆம் திகதியன்று இவ்விடயம் தொடர்பான வழக்கு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது இரு பெண்களையும் உளநல மருத்துவரிடம் காண்பித்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இரு யுவதிகளும் கல்முனை ஆதார வைத்திய சாலை மனநலப் பிரிவில் சேர்க்கப்பட்டு, பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் பெண்கள் இருவரும் நீதிமன்றக் கட்டளையின்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மீண்டும் இந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிவானின் சமாதான அறையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் இரு பெண்களின் உளநல மருத்துவ அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளும் இவ்வழக்கில் பிரசன்னமாகி முஸ்லிம் யுவதியின் ஒன்றரை வயதுக் குழந்தையின் எதிர்கால நலனை நீதிவானின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருந்தனர்.

அதை அடுத்து அக்கரைப்பற்று நீதிவான் எம்.எச்.எம். ஹம்ஸா முதலாவது சந்தேக நபரான முஸ்லிம் யுவதியை ஒரு லட்சம் ரூபா ஆள்பிணையில் விடுவித்து, பெண்கள் காப்பகமொன்றில் அவரது குழந்தையின் எதிர்கால நலன் மற்றும் குறித்த பெண்ணின் நடத்தை கோலங்கள் தொடர்பில் அறிக்கை கிடைக்கும் வரை ஒப்படைக்குமாறு பணித்து வழக்கை ஜூலை மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இரண்டாவது சந்தேக நபரான தமிழக யுவதி தொடர்பில் குற்றச்சாட்டு ஏதும் நிரூபிக்கப்படாமையினால் அவர் தொடர்பில் முன்னிலையான பெண் சட்டத்தரணி அவரை இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் ஒப்படைத்து, சொந்த இடத்திற்கு மீள அனுப்புவதற்கு அனுமதிக்கும்படி விடுத்த விண்ணப்பத்தை பரிசீலனை செய்த நீதிவான் அவரை விடுவித்து அனுமதி வழங்கினார்.

அவரை, பெண் சட்டத்தரணியுடன் மட்டக்களப்பில் இருந்து வான் ஒன்றில் வந்த பெண்கள் உரிமை தொடர்பான அமைப்பு ஒன்று அழைத்துச் சென்றது.

இந்த வழக்கில் முதலாவது முறைப்பாட்டாளர்களான முஸ்லிம் யுவதியின் பெற்றோர் மற்றும் கணவன் சார்பாக சட்டத்தரணிகளான ஏ.எம் ஜெனீர் மற்றும் எம்.ஐ. றிஸ்வான் ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# யாழில் தனது பிரத்தியேகப் பணத்தை முதலீடு செய்து ஒருநாள் கடவுச்சீட்டு சேவையை ஆரம்பிக்கிறார் தம்மிக்க

கடவுச்சீட்டு ஒருநாள் சேவை துரிதப்படுத்தப்படும் என அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

இதற்காக யாழ்ப்பாணம், கண்டி, மாத்தறை ஆகிய பிராந்திய அலுவலகங்களிலும் ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன் முதல்கட்டமாக, யாழ்ப்பாணத்தில் உள்ள குடிவரவு, குடியகல்வு அலுவலகத்தில் தனது பிரத்தியேகப் பணத்தை முதலீடு செய்து ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் தம்மிக்க பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கடவுச் சீட்டைப் பெறுவதற்கும் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர் எனவும், இந்த நிலைமையை மாற்றியமைப்பேன் எனவும் அமைச்சர் தம்மிக்கப் பெரேரா தெரிவித்துள்ளார். இதனைத் தவிர மேலும் ஐந்து இடங்களில் பிராந்திய அலுவகங்களையும், ஒருநாள் சேவையையும் ஆரம்பிக்கவுள்ளேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் தம்மிக்க பெரேராவின் அமைச்சின் கீழ், முதலீட்டு ஊக்குவிப்புச் சபை, கொழும்பு துறைமுக நகர், பொருளாதார ஆணைக்குழு, கொழும்பு துறைமுக நகரை அண்டிய அபிவிருத்தித் திட்டம், குடிவரவு, குடியகல்வு திணைக்களம், கொழும்பு தாமரைத்தடாக முகாமைத்துவ நிறுவனம், டொக்னோ பார்க்க கம்பனி பிரைவெட் லிமிட்டெட் தக வல், தொழில்நுட்ப மையம், ஆகிய நிறுவனங்கள் அவரது அமைச்சின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான வர்த்தமானியும் நேற்றிரவு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கொழும்பு மாவட்ட நீதிமன்றப் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என அறிவிப்பு

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்ற பதிவாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்படி பணிகள் இன்று (செவ்வாய்க் கிழமை) முதல் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தடை உத்தரவு கோரி, அவசர வழக்குகள் தொடர்பாக தாக்கல் செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் முன்மொழிவுகளை குறித்த நாளில் காலை 10 மணிக்குள் காப்பகத்தில் ஒப்படைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி தினத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் நிலையில், அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு முன்னதாக அறிவித்தல் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# சரத் ஏக்கநாயக்க ஐ.தே.கவுடன் இணையவுள்ளார் எனத் தகவல்?

மத்திய மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் தற்போது அங்கம் வகிக்கும் சரத் ஏக்கநாயக்க கட்சியின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தியில் உள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையிலேயே அவர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து அரசியல் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்கவும் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மின் கட்டணத் திருத்தம்; பரிந்துரைகள் வெளியாகின

மின் கட்டண திருத்தம் தொடர்பான பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய 0 முதல் 30 அலகுகள் வரையிலான வீட்டு மின்சார உபயோகத்துக்கான தற்போதைய மாதாந்த நிலையான கட்டணத்தை 150 ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கு இலங்கை மின்சார சபை 430 ரூபாவை முன்மொழிந்திருந்தது.

அத்துடன், 1 தொடக்கம் 30 அலகுகளுக்கு இடைப்பட்ட மின்சார அலகு ஒன்றின் கட்டணத்தை 2 ரூபா 50 சதங்களாலும் அதிகரிப்பதற்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

இதேவேளை, 31 தொடக்கம் 60 அலகுகளுக்கு இடைப்பட்ட நிலையான கட்டணத்தை ஆயிரத்து 100 ரூபாவால் அதிகரிக்க இலங்கை மின்சார சபை முன்மொழிந்த போதிலும், பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அதனை 300 ரூபாவாக அதிகரிக்கப் பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன், தற்போது 4 ரூபா 85 சதமாக உள்ள 31 தொடக்கம் 60 அலகுகளுக்கு இடைப்பட்ட மின்சார அலகு ஒன்றின் கட்டணத்தை 12 ரூபா 50 சதங்களால் அதிகரிக்க வேண்டுமென இலங்கை மின்சார சபை பரிந்துரைத்துள்ள போதிலும், 10 ரூபா கட்டண திருத்தத்தை மாத்திரமே பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

# பதவியை துறக்கத் தயார் சஜித்துக்கு ஹரின் சவால்!

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

மூன்று நாடுகளிலிருந்து தன்னால் எரிபொருள் கொள்வனவு செய்ய முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்திருந்தார்.

நாட்டு நலன் கருதி இதனை அவர் செய்ய வேண்டும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாஸ, அவ்வாறு எரிபொருளை கொள்வனவு செய்தால், அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வதற்குத் தான் தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நெருக்கடியான சூழ்நிலையிலும் எதிர்க்கட்சியினர் அரசியல் செய்கின்றனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# இலங்கையின் ஏற்றுமதி பொருள்களின் விற்பனைக்கு உதவ சீனா தீர்மானம்!

சீனாவில் விற்பனை காட்சியகங்களை நிறுவி இலங்கை ஏற்றுமதிப் பொருள்களின் விற்பனைக்கு உதவ சீனா முன்வந்துள்ளது.

சீனாவின் யுவான், சிச்சுவான், பீஜிங் ஆகிய மாகாணங்களில் இலங்கை ஏற்றுமதி பொருள்களுக்கான காட்சியகங்களை நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அதிகாரிகள், இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கொஹோனாவிடம் உறுதியளித்துள்ளனர்.

இந்த விற்பனை காட்சியகங்களை நடத்துவதற்கான செலவை சீனாவின் அந்தந்த மாகாணங்கள் ஏற்றுக் கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தனது தயாரிப்புகளுக்கான சீன சந்தையை அணுகுவதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும் என சீனாவிற்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கொஹோனா தெரிவித்துள்ளார்.

# மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் மக்களிடமிருந்து முன்மொழிவுகள்

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில், பொதுமக்களிடமிருந்து முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இன்று(செவ்வாய்க்கிழமை) முதல் 3 வாரங்களுக்கு, மின் கட்டண அதிகரிப்பு தொடர்பான முன்மொழிவுகள், பொதுமக்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை மின்சார சபையால் முன்வைக்கப்பட்டுள்ள மின்கட்டண அதிகரிப்பு தொடர்பான முன்மொழிவுகள், இன்று முதல் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும் என ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

# மரக்கறிகள் சந்தைக்கு கொண்டுசெல்லல் முற்றாக ஸ்தம்பிதமடையும் நிலைமையில்!

மரக்கறி உற்பத்திகளை சந்தைக்கு கொண்டு செல்லுதல் மற்றும் நாடு முழுவதும் விநியோகிப்பது முற்றாக ஸ்தம்பிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மெனிங் சந்தை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் அருண ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

மீண்டும் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டமையே இதற்குக் காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கமத்தொழில் வளர்ச்சி தொடர்பாக அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டாது எடுக்கும் முடிவுகள் காரணமாக மரக்கறிகளைப் பயிரிடும் விவசாயிகள் முற்றிலும் பயிர்ச்செய்கையில் இருந்து விலகிச் செல்வதை நிறுத்த முடியாது போகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# ரயில் கட்டணத் திருத்தத்துக்கு அமைச்சரவை அனுமதி அளிப்பு

ரயில் கட்டணத்தில் திருத்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் முன்வைத்த கோரிக்கைக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# நாட்டின் சுகாதார சேவைகளுக்கு சரியான திட்டத்தைத் தயாரிக்குக!

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக வைத்தியர்கள் மற்றும் சகல சுகாதார ஊழியர்களும் வைத்தியசாலைகளுக்கு அறிக்கையிடுவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தின் தலைவர் வைத்தியர் தர்ஷன சிறிசேன அரசாங்கத்திடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சருடன் இன்று(செவ்வாய்க்கிழமை) பிற்பகல் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.06.2022இல் வெளியிடப்பெற்றது.